# இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு

## 2021 ஜனவரி 10, 11

### கருப்பொருள்

### "பன்முகநோக்கில் சங்க இலக்கியம்".

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை கடந்த ஜனவரி 10 ஆம், 11 ஆம் (2020) நாள்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 'வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்' என்னும் கருப்பொருளில் அனைத்துலக ஆய்வு மாநாடொன்றினை வெற்றிகரமாக நடத்தியிருந்தது. வெளிநாட்டு ஆய்வாளர்கள் பெருமளவில் கலந்துகொண்ட இம் மாநாட்டினை நடத்தியதன் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மாணவர்கள் பெரிதும் பயன்பெற்றுள்ளனர். பயன்மிக்க இவ்வாய்ப்பினை ஆண்டுதோறும் இதே தினங்களில் நடத்த வேண்டும் என்பதே தமிழ்த்துறையின் விருப்பமாகும். இம் மாநாட்டிற்கான நிதியுதவியை கந்தையா கார்த்திகேசன் அறக்கட்டளையே வழங்கிவருகின்றது என்பதை நன்றியுடன் நினைவுகூருகின்றோம். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி 2021 ஜனவரி 10 ஆம், 11 ஆம் நாள்களில் இரண்டாவது மாநாட்டினை நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

எமக்குக் கிடைத்துள்ள இலக்கியங்களில் காலத்தால் முற்பட்டவை சங்க இலக்கியங்கள். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற இருவேறுதொகுதிகளாகவுள்ள இவ்விலக்கியங்கள் தமிழரின் வரலாற்றுத்தொன்மை, பண்பாட்டுச்சிறப்பு, மொழிவளர்ச்சி, பன்னாட்டுத்தொடர்பு எனப் பலவற்றையும் வெளிப்படுத்தி நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. சங்க இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள் தமிழ் ஆய்வுலகில் என்றும் முற்றுப்பெறாத ஆய்வுகளாகவே உள்ளன. அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரமாகவுள்ள இவ்விலக்கியங்களை தொல்லியல், மானிடவியல் முதலான ஆய்வுப் புலங்களின் வளர்ச்சியினால் மென்மேலும் புதிய புதிய கோணங்களில் ஆய்வாளர்கள் அணுகி வருவதை ஆய்வுலகம் நன்கறியும். இதனால் இந்த ஆண்டில் நாமும் சங்க இலக்கியங்கள் தொடர்பான தேடல்களை மையப்படுத்தியதாக எமது மாநாட்டின் கருப்பொருளை அமைத்துள்ளோம்.

**ஆய்வுத்தடங்கள்:**

1) இலக்கண நோக்கில் சங்க இலக்கியம்.
2) மொழியியல் நோக்கில் சங்க இலக்கியம்.
3) வரலாற்று நோக்கில் சங்க இலக்கியம்.
4) தொல்லியல் நோக்கில் சங்க இலக்கியம்.
5) சூழலியல் நோக்கில் சங்க இலக்கியம்.

6) ஒப்பியல் நோக்கில் சங்க இலக்கியம்.
7) சமூகவியல் நோக்கில் சங்க இலக்கியம்.
8) அறிவியல் நோக்கில் சங்க இலக்கியம்.
9) இனவரைவியல் நோக்கில் சங்க இலக்கியம்.
10) பொருளியல் நோக்கில் சங்க இலக்கியம்.
11) அரசியல் நோக்கில் சங்க இலக்கியம்.
12) சங்கஇலக்கியமும் பதிப்பு முயற்சிகளும்.
13) சங்கஇலக்கியமும் உரை முயற்சிகளும்.
14) சங்கஇலக்கிய ஆய்வுகள்.
15) சங்கஇலக்கியமும் கலையும்.
16) சங்ககால வழிபாட்டு மரபு.
17) சங்க இலக்கியப் பாவியல்.
18) சங்க இலக்கிய உத்திகள்.
19) பிற்காலத் தமிழிலக்கியங்களில் சங்க இலக்கியத் தடங்கள்.

**கட்டுரை அனுப்புவதற்கான காலம்:**

| | | |
|---|---|---|
| நிகழ்வுக்காலம் | :- | 2021 ஜனவரி 10, 11. |
| கட்டுரை அனுப்பவேண்டிய இறுதித்திகதி | :- | 2020 ஒக்ரோபர் 15. |
| ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு | :- | 2020 நவம்பர் 15. |
| பதிவுக்காலம் | :- | 2020 நவம்பர் 30 இன் முன். |
| பதிவுக்கட்டணம் | :- | உள்ளூர் ஆய்வாளர்கள் 4,000.00 |
| | | உள்ளூர் பட்டதாரி மாணவர்கள் 1,000.00 |
| | | வெளிநாட்டு ஆய்வாளர்கள் 50 அமெரிக்க டொலர் |

**கட்டுரை அமையவேண்டிய முறை:**

- ஆய்வுக்கட்டுரை சொந்த முயற்சியாக இருப்பதுடன் இதற்கு முன்னர் வேறெங்கும் பிரசுரிக்கப்படாததாகவும் இருக்கவேண்டும்.
- மொழிமூலம்: தமிழ்
- கணினி அச்சில் பாமினி எழுத்துருவில் அமைய வேண்டும். (Bamini எழுத்தில் Word, PDF கோப்புருவில்)

- எழுத்துக்களின் அளவு:
    - தலைப்பு: 14
    - ஆய்வுச்சுருக்கம்: 10
    - கட்டுரை: 12

- வரிகளின் இடைவெளி: 1.5
- தாள்: A4
- பக்க அளவு: 12 பக்கங்களுக்கு மேற்படாமல்.

- கட்டுரையின் அமைப்பு:
    - தலைப்பு.
    - ஆசிரியர்(கள்) பெயர்.
    - பதவிநிலை.
    - முகவரி.
    - தொலைபேசி இலக்கம்.
    - மின்னஞ்சல் முகவரி.
    - 100 சொற்களுக்கு மேற்படாத ஆய்வுச்சுருக்கம், திறவுச்சொற்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக முழுமையான ஆய்வுக்கட்டுரை அமைய வேண்டும்.
    - ஹாவாட் (HAVARD) முறையிலான அடிக்குறிப்புக்கள், உசாத்துணை என்பனவும் இடம்பெற வேண்டும்.


- அனுப்பவேண்டிய முகவரி:
    - மின்னஞ்சல்: ict2019tamil@gmail.com
    - தபாலில்:

        பேராசிரியர். ம. இரகுநாதன்,<br>
        தலைவர், தமிழ்த்துறை,<br>
        கலைப்பீடம்,<br>
        யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,<br>
        இலங்கை.

- தொடர்புகளுக்கு: 0094 779788735

    0094 212227421